

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் எம்.பி அவர்கள் முன்னிலையில், 160 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு பொருட்களை கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரியில் இன்று (18.09.2016) வழங்கினார்.

செ.வெ.எண்:644 நாள்:18.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப.,அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் எம்.பி அவர்கள் முன்னிலையில், 160 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு பொருட்களை இன்று (18.09.2016) வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் எம்.பி அவர்கள் முன்னிலையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் 160 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு பொருட்களை கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரியில் இன்று (18.09.2016) வழங்கினார்.

பின்னர் மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் எம்.பி அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், பெண்களின் கல்வியை ஊக்குவிப்பதற்காக ஏற்கனவே தாலிக்கு வழங்கப்பட்டுவந்த நான்கு கிராம் தங்கத்தினை மீண்டும் எட்டு கிராம் தங்கமாக உயர்த்தியுள்ளார். மேலும் கர்ப்ப காலத்தில் ஆறுமாத காலமாக இருந்த விடுமுறையை, ஒன்பது மாதமாக உயர்த்தியுள்ளார். மேலும் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தி பெண்கள் மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று (18.09.2016) நமது மாவட்டம் முழுவதுமாக 47 இடங்களில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தி, சுமார் 2,000 கர்ப்பிணி பெண்களுக்கு பூ, வாழைப்பழம், பலகாரம், வளையல், வெற்றிலை, பாக்கு மற்றும் மகப்பேறு கையேடு என ஐந்து வகையான சீர்வரிசை பொருட்கள் வழங்கப்படுகிறது.

இதுபோன்ற பல்வேறு பெண்களுக்கான திட்டத்தை அறிவித்து, அதனை அனைத்து தரப்பு மக்களும் பெற்று பயனடைய செய்கின்ற ஒரே முதலமைச்சர் அம்மா அவர்கள் மட்டும்தான் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி பேச்சியம்மாள், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி தலைவர் திரு.சந்தையடி பாலகிருஷ்ணன், திரு.நாஞ்சில் சந்திரன், திரு.வேல்முருகன், திரு.கனகராஜன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.